## மார்ச் - 04 - சனி

### புனித கசிமிர்

### "நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன்'' (லூக்.5:32)

---

### முதல் வாசகம்: ஏசாயா 58: 9 – 14

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ் சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும். ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர்பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றுபோலும் இருப்பாய். உன் மக்கள் பண்டை நாளிலிருந்து பாழடைந்து கிடப்பவற்றைக் கட்டியெழுப்புவர் தலைமுறை தலைமுறையாக உள்ள அடித்தளங்களின் மேல் கட்டியெழுப் புவாய் தகர்ந்த மதிலைத் திரும்பக் கட்டுபவன் என்றும் குடியிருப்பதற்குத் தெருக்களைச் சீர்படுத்துபவன் என்றும் பெயர் பெறுவாய். ஓய்வுநாளின் முறைமைகளினின்று விலகிச் செல்லாது, என் புனித நாளில் உன் விருப்பம் போல் செய்யாதிருந்து, ஓய்வு நாள் "மகிழ்ச்சியின் நாள்" என்றும் "ஆண்டவரின் மேன்மைமிகு புனித நாள்" எனவும் சொல்லி அதற்கு மதிப்புத் தந்து, உன் சொந்த வழிகளில் செல்லவோ உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுகளைப் பேசவோ செய்யாதிருந்தால், அப்பொழுது, ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய் நானோ, மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம்வரச் செய்வேன் உன் மூதாதையாகிய யாக்கோபின் உரிமைச் சொத்தின் மூலம் உனக்கு உணவளிப்பேன் ஆண்டவரின் வாய் இதை உரைத்தது.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது வழியை எனக்குக் கற்பியும்

### நற்செய்தி: லூக்கா 5: 27 – 32

அந்நாட்களில் இயேசு வெளியே சென்று சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரி தண்டுபவர் ஒருவரைக் கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா!" என்றார். அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரியவிருந்து அளித்தார். வரி தண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள். பரிசேயர்களும் அவர்களைச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களும் முணுமுணுத்து இயேசுவின் சீடரிடம், "வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்?" என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்" என்றார்.

**தியானம்:** தவக்காலத்தின் முதலாவது வாரத்தில கால் பதித்துள்ள எமக்கு நாமும் பாவிகள், நேர்மையாளர்களல்ல நோயுற்றவர்கள் என்பதை உணர்ந்துகொண்டு இறைவனுக்கு ஏற்புடையனவற்றை செய்து அவரோடு ஒன்றித்திருக்க இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைத்து நிற்கின்றது. கடவுளோடும் சக மனிதர்களோடும் எமக்குள்ள உறவு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா அழகாக எடுத்துரைக்கினறார். அதாவது மனிதர்கள் யாவரும் இறைசாயலாக படைக்கப்பட்வர்கள் எவரையும் நாம் உடல், உள, ரீதியாக ஒதுக்கிவிடக்கூடாது. ஒடுக்குமுறை அகற்றப்பட வேண்டும் என்கின்றார். நற்செய்தியில் வரிதண்டுபவராகிய லேவி பாவி என ஒதுக்கப்பட்டிரந்தவரை இயேசு என்னைப் பின்பற்றி வா என்று அழைக்கின்றார். அழைப்பினை உணர்ந்தவரான லேவி அனைத்தையும் விட்டு விட்ட பின் சென்றது மட்டுமல்லாது இயேசுவை தன் இல்லம் வரவேற்று பெரிய விருந்து அளிக்கின்றார். பாவியாகிய லேவியை கண்ணுற்ற தேவன் எங்களையம் காண்பவராக இருக்கின்றார். என மனமாற்றத்திற்காக அவர் காத்திருக்கின்றார். இறைச்சித்தத்திற்த அமைந்து வாழ முற்படுவோம்.